


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*




VOL - 4 ISSUE - 52 Editorial : 044-42077328 / 7305837388

## சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற பவித்ரோத்ஸவம் விழா...

நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் பவித்ரோத்ஸவம் கடைசிநாள் அன்று பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடைபெற்றது பக்தர்கள் அனைவருக்கும் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

ஏம்பெருமானுக்குத் திருவாராதனம் ஸமர்பிக்கப்படும் போதும் மற்றைய உத்ஸவங்களிலும் மந்த்ர லோபம் (குறைவு) ஏற்படக்கூடும். ஆதனால் எம்பெருமானுடைய ஸாந்நித்யம்





குறைய வாய்ப்பு உண்டு. அவ்வாறு ஏற்படும் குறைகளைப் போக்குவதற்காகப் பவித்ரோ-த்ஸவம் கொண்டாடப்படுகிறது.

பவித்ரோத்ஸவம் என்பது புனிதப் படுத்துதல் என்ற பொருளில் வரும் பெருமாளையே பவித்ரன் என அழைப்பார்கள். கோயிலுக்குப் பலதரப்பட்ட மக்களும் வருவார்கள். திருவாராதனம் ஸமர்ப்பிப்பதில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் மந்திர லோபம் ஆகியவற்றை நீக்குவதற்காகப்"பவித்ரோத்ஸவம்" கொண்டாடப் படுகிறது.

## NASSCOM AWARDS GURU NANAK COLLEGE CHENNAI FOR THE HIGHEST NUMBER OF CERTIFICATIONS...



At the recent Nasscom Annual Technology Conference 2023, Guru Nanak College (Autonomous) Chennai was awarded for achieving one of the highest number of Nasscom certifications towards building India as a 'digital talent Nation' with its IT skilling programmes with Future Skills Prime(Meity Nasscom Digital Skilling initiative). The award was received by Mr. Manjit Singh Nayar, General Secretary and Correspondent in the presence of Dr. Marlene Morais, Advisor, Dr. Swati Paliwal, Head, Guru Nanak Centre for Consultancy and Outreach initiatives, Dr. R.Anand, Dean, and Dr. M. Kavitha, Deputy Dean, Guru Nanak Centre for Skill Development and Mr. Udaya Shankar, Lead-Academia at Scale, Government Initiatives IT-ITeS SSC nasscom.. This award was presented by Ms. Kirti Seth, CEO of NASSCOM, Future Skills Prime and Mr. Manmeet Singh, CEO-VS Global at First Meridian Business Services.





# CLASSIFIED

## VELACHERY
**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

Contact
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE
**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

## Mother Land
*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*
**72992 62185**
**90947 52300**

---

## WANTED
*Tele Callers*

CONTACT
**7305837388**

---

**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor
*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery*
*( Bethel Hr Sec School Opp )*
3 month rent as advance

CONTACT
8015427018

---

## WANTED
Front Desk Executive
*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

*Contact*
**9841030772**

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**

## NFC
**NIMS FOOD CONSULTANT**

**E. KAMESH KUMAR** IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

**Mobile:9790 902400**
email:Consultantnfc@gmail.com

---

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் 102.63 | ₹ விலை 1 லிட்டர் 94.24 |

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

**Online Class for Women and Kids**

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT*
**89391 53560**

---

## DESIGNING
Tamil & English DTP designing works Rs. 500/- only

*Contact*
**7358182075**

---

## WANTED
**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**

---

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5535 | 1 கிராம் | 6005 |
| | 8 கிராம் | 44280 | 8 கிராம் | 48040 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 80.20 | | |
| | 1 கிலோ | 80200 | | |

Friday Price

---

**TUITION CENTRE @ Velachery**

## Baby Nagar
*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
**909 494 7285**

---

## Butter Flies
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

## SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
Drivers Available

Contact V. Marimuthu
**9840508030**

---

## RENTAL
**LAND BUYING, SELLING**

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
**90809 94500**

---

## SERVICES
**Plumbing works**

**Contact**
**Govindaswamy**
87544 09752

ஆன்மீக தகவல்

# மகா சங்கடஹர சதுர்த்தி நாளன்று விநாயகரை எப்படி பிடித்து வழிப்பட வேண்டும்

ஆவணி மாதம் வந்துவிட்டது. ஆவணி மாதத்தில் அவதரித்த அற்புதமான பிள்ளையாக இருப்பவர்தான் பிள்ளையார். இந்த ஆவணி மாதத்தில் வரக்கூடிய சங்கடஹர சதுர்த்தியை மகா சங்கடஹர சதுர்த்தி என்று நாம் கூறுகிறோம். அதே போல் விநாயக சதுர்த்தியும் இதே ஆவணி மாதத்தில் தான் வரும். மாதா மாதம் வரக்கூடிய சங்கடஹர சதுர்த்தி நாளன்று நாம் விநாயகரை வழிபடாவிட்டாலும் ஆவணி மாதத்தில் வரக்கூடிய மகா சங்கடஹர சதுர்த்தி நாளை நாம் மறவாமல் வழிப்பட வேண்டும்.

இவ்வாறு நாம் அவரை வழிப்பட்டால் அந்த வருடம் முழுவதும் அவரை வழிபட்டதற்குரிய பலனையும் நம்மால் பெற முடியும். அப்படிப்பட்ட பிள்ளையாரை நாம் எந்தெந்த பொருட்களில் பிடித்து வைத்து வழிபட்டால் நமக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கும் அதனால் நம் வாழ்க்கை எந்த அளவுக்கு மாறும் என்பதை தெரிந்து கொள்ள இந்த ஆன்மீகம் குறித்த பதிவு நமக்கு உதவி செய்யும்.

பொதுவாக பிள்ளையார் என்றதும் அனைவரும் அவரை மஞ்சளில் பிடித்து வைத்து வழிபடுவார்கள். மிகவும் முக்கியமான யாகங்கள் நடக்கும் போது விநாயகரை சாணத்தில் பிடித்து வைத்து வழிபடுவார்கள். நாம் பிடித்து வைக்கும் அந்த பொருளுக்குரிய பலன் என்ன ஏன்பதை நாம் உணர்ந்து செய்ய வேண்டும்.

மஞ்சளில் விநாயகரை பிடித்து நாம் வழிபடுவதன் மூலம் நாம் எந்த காரியத்தை நினைத்து அவரை பிடிக்கிறோமோ அந்த காரியம் வெற்றி அடையும். சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். குங்குமத்தில் விநாயகரை பிடித்து வழிபாடு செய்தால் நமக்கு இருக்க கூடிய செவ்வாய் தோஷங்கள் அனைத்தும் நீங்கும். குழந்தைகள் இந்த பிள்ளையாரை வழிபடுவதன் மூலம் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

மிகவும் தூய்மையான மண்ணாக கருதப்படும் புற்று மண்ணில் பிள்ளையாரை பிடித்தோம் என்றால் உடலில் இருக்கக்கூடிய நோய்கள் அகலும். வெல்லத்தில் பிள்ளையாரை பிடித்து வைத்து வழிபட்டோம் என்றால் நாட்பட்ட தீராத நோய்களிலிருந்தும் நம்மை விநாயகர் விடுவிப்பார்.

உப்பில் பிள்ளையாரை பிடித்து நாம் வழிபட்டோம் என்றால் எதிரிகளின் தொல்லைகள் அனைத்தும் நீங்கிவிடும். எருக்கன் செடியின் வேரிலிருந்து பிள்ளையாரை செய்து வழிபட்டால் நமக்கு இருக்கக்கூடிய தீவினைகள் அனைத்தும் அகலும். செல்வ செழிப்பு ஏற்படும்.

விபூதியால் பிள்ளையாரை பிடித்து வழிபட்டோம் என்றால் உடலில் இருக்கும் நோய்கள் தீரும். சந்தனத்தால் விநாயகரை பிடித்து வழிபட்டோம் என்றால் குழந்தை பாக்கியம் விரைவில் கிடைக்கும். சாணத்தால் பிள்ளையாரை பிடித்து வழிபடும் பொழுது சகலதோஷங்களும் விலகும். மேலும் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் விரைவில் நடைபெறும். பசுமாட்டுச் சாணமாக இருக்க வேண்டும்.

வாழைப்பழத்தால் பிள்ளையாரை செய்து வழிபட்டால் வம்சம் விருத்தி ஏற்படும். வெண்ணையால் பிள்ளையாரை பிடித்து வழிபட்டால் கடன் தொல்லைகள் அனைத்தும் நீங்கி மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்கும். சர்க்கரையால் பிள்ளையாரை செய்து வழிபட்டால் உடலில் இருக்கக்கூடிய நோயின் வீரியம் குறையும். கல் பிள்ளையாரை செய்து வழிபட்டால் வாழ்க்கையில் வெற்றிக்கு மேல் வெற்றி கிடைக்கும். மண் பிள்ளையாரை செய்து வழிபட்டால் சிறந்த வேலையும், உயர் பதவியும் கிடைக்கும். பிள்ளையாரை நாம் எந்த பொருளில் பிடிப்பதாக இருந்தாலும் சரி அந்த பொருளுடன் பன்னீரையும் சிறிது ஜவ்வாதையும் சேர்ந்து பிடித்தால் நமக்கு பரிபூரண பலனை விநாயகர் அருள்வார் என்பதை மறக்காதீர்கள்.

உங்கள் வாழ்க்கைக்கு என்ன தேவையோ அதற்கு ஏற்றார் போல் பிள்ளையாரை பிடித்து இந்த மகா சங்கடஹர சதுர்த்தி நாளன்று அவரை வழிபட்டு வாழ்வில் அனைத்து செல்வங்களையும் பெற்று நலமுடன் வாழுங்கள்.

இயற்கை விவசாயம்

# எலிகள்தொல்லையை கட்டுப்படுத்துவது எப்படி ?

ஆந்தை மற்றும் கோட்டான் போன்ற பறவைகள் அதிகமான எலிகளை இரவில் வேட்டையாடும் பழக்கத்தை கொண்டவை அதை மட்டும் கோட்டங்களை நம் இடத்திற்கு வரவழைக்க ஒரு ஏக்கரில் ஐந்து முதல் எட்டு இடங்களில் 6 அடி முதல் 8 அடி உயரம் கொண்ட T வடிவ குச்சிகளை நட்டு வைப்பதன் மூலம் ஆந்தைகளும் கோட்டான்களும் நிலத்திற்கு வரவழைக்க முடியும். மேலும் ஆந்தை மற்றும் கோட்டான்களுக்கு தேவையான இருப்பிட வசதிகளை மரப்பெட்டி கொண்டு செய்வதன் மூலம் நிலத்தில் இருக்கும் மரத்தின் உயரமான பகுதிகளில் வைப்பதன் மூலம் ஆந்தை மற்றும் கோட்டான்கள் அங்கு வந்து தங்கி தனது இனப்பெருக்கத்தை செய்யும் பொழுது உங்களுக்கு அதிகமான எலிகளை கட்டுப்படுத்த வசதியாக இருக்கும்.

கோட்டான் மற்றும் ஆந்தைகள் ஒருமுறை முட்டை வைத்து குஞ்சு பொரித்தவுடன் அதன் குஞ்சுகளுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று எலிகளை உணவாக கொடுக்கும் தேவை இருக்கும் மேலும் தாய் பறவைகளும் எலிகளை மிக கச்சிதமாக வேட்டையாடி கொன்று விடும் இதனால் உயிரியல் முறைப்படி கோட்டான்கள் மற்றும் ஆந்தைகள் மூலம் நம் நிலத்தில் இருக்கும் எலிகளை அதிக அளவில் கட்டுப்படுத்த முடியும்.

நம்முடைய நிலத்தில் இருக்கிற எலி தொல்லையை குறைப்பதற்கு நம்ம வயல்களில் இருக்கிற வரப்புகளின் உயரத்தையும் அகலத்தையும் உழைக்க வேண்டும்.

நிலத்தின் வரப்பை செங்குத்தாக அமைக்காமல் 45 டிகிரி சாய்வாக அமைப்பின் மூலம் எலி தொல்லையில் இருந்து விடுபட முடியும்.

வயல்களில் இருக்கும் கலைகள் மற்றும் பொருட்களை அகற்றுவதன் மூலம் எலிகள் வயல்களில் தெரியும் பொழுது அதனை பிடிக்கவும் பிடித்து அழிக்கவும் முடியும்.

மிகவும் வளர்ந்த இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருக்கும் விவசாய நிலங்களிலும், கிராமப் பகுதிகளில் இருக்கும் எலிகளை கட்டுப்படுத்தவும், பசுமை குடில் போன்ற மிகப்பெரும் அமைப்புகளுக்குள் இருக்கும் எலிகளை கட்டுப்படுத்தவும் இஸ்ரேலவிவசாயிகள் அந்த இடங்களில் ஆந்தைகள் வளர்ப்பதன் மூலம் இயற்கை முறையில் எந்தவித தடங்கலுமின்றி எலியை கட்டுப்படுத்த முடிகிறது. இதன் மூலம் எந்த விதமான ரசாயனங்களை பயன்படுத்தாமல், இயற்கையின் உயிர் சங்கிலியின் முறையில் ஆந்தைகளைக் கொண்டு எலி தொல்லையை கட்டுப்படுத்தி வருகின்றனர்

நெற்கதிர் வெளிவரும் தருணத்தில் எலிகளை கட்டுப்படுத்த வறுத்த கம்பு மாவு, சோள மாவு, கேழ்வரகு மாவு மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுடன் ஜிங் பாஸ்பைடு கலந்துதேங்காய் சிரட்டையில் எலிகள் நடமாட்டம் அதிகம் காணப்படும் பகுதியில் வைக்க வேண்டும்.

எலி அடிக்கடி நடமாடும் இடத்தில் பாரீஸ் மற்றும் கோக்கோ பவுடரை கலந்து போட்டு வையுங்கள். இது எலிக்கு தாகத்தை ஏற்படுத்தி தண்ணீர் குடித்த உடன் இறக்க நேரிடும்.

# தங்க மீனும் மீனவரும்

நீதி கதை

ஒரு ஏரிக்கு பக்கத்துல ஒரு மீனவர் வாழ்ந்துகிட்டு வந்தாரு

அவரு தினமும் ஏரிக்கு போயி மீன்பிடிப்பாரு ,அந்த மீன சந்தையில வித்து தன்னோட மனைவிக்கு பிடிச்சத வாங்கிட்டு வருவாரு





ஆனா அவரோட மனைவி ரொம்ப பேராசை காரியா இருந்தாங்க ,எவ்வளவு பொருள் வாங்கிட்டு வந்தாலும் அதிகமா வேணும்னு கேட்டுகிட்டே இருப்பாங்க




ஒருநாள் அந்த மீனவர் மீன் பிடிக்க போனாரு ,அப்ப அவரோட தூண்டில்ல ஒரு தங்கமீன் மாட்டுச்சு

மீனவரே மீனவரே ,என்ன விட்டுடுங்க ,நான் உங்களுக்கு ஒரு நல்ல நண்பனா இருப்பேன்னு சொல்லுச்சு அந்த தங்க மீன்





அந்த மீன் பேசுனத கேட்டதும் மீனவருக்கு ஆச்சர்யமா போச்சு ,உடனே அவரு அந்த மீனை தூண்டில்ல இருந்து விடுவிச்சாரு



இந்த விஷயத்தை தன்னோட மனைவிக்கு சொன்னாரு ,அதுக்கு அவுங்க ரொம்ப கோபப்பட்டாங்க

பேசுற தங்க மீன் கிட்ட ஒரு நல்ல மாடி வீடு கேட்டிருக்கலாம்ல ஏன் அத போக விட்டீங்கனு சத்தம் போட்டாங்க



உடனே ஏரிக்கு போன அந்த மீனவர் அந்த மீன கூப்பிட்டாரு ,உடனே தண்ணிக்கு மேல வந்தது அந்த தங்க மீன்

தங்கமீனே தங்க மீனே எனக்கு ஒரு நல்ல மாளிகை வீடு வேணும்னு கேட்டாரு ,உடனே சரினு சொல்லி ஒரு மந்திரத்தை சொல்லுச்சு அந்த மீன்

வீட்டுக்கு வந்து பார்த்தா ,அவரோட வீடு ஒரு பெரிய மாளிகையா மாறியிருந்துச்சு


ஆனா அவரோட மனைவிக்கு ஆசை அடங்கல ,நீங்க திரும்ப போயி நமக்கு ஒரு அரண்மனை வேணும்னு கேளுங்கன்னு சொன்னாங்க





உடனே ஏரிக்கு வந்து தனக்கு ஒரு அரண்மனை வேணும்னு கேட்டாரு அந்த மீனவர்

உடனே அதுக்கும் ஒரு மந்திரத்தை சொல்லுச்சு அந்த மீன் ,வீட்டுக்கு திரும்பி வந்து பாத்தா அவரோட வீடு அரண்மனையா மாறியிருந்துச்சு





பேராசை படர அந்த மனைவி சொன்னாங்க நாம் வானத்துல இருக்குற மேகத்துக்கு மேல வாழுற மாதிரி வீடு வேணும்னு கேக்க சொல்லி தொந்தரவு பன்னாங்க

திரும்பவும் தங்க மீன்கிட்ட வந்து ,தன்னோட மனைவி கெட்டத கேட்டாரு ,அதுக்கும் ஒரு மந்திரத்தை சொல்லுச்சு தங்க மீன்

வீட்டுக்கு வந்து பாத்தா ,வீடு இருந்த இடத்துல ஒண்ணுமே இல்ல,பயந்து போன அந்த மீனவர்





ஏரிக்கு ஓடிவந்து தங்க மீன் கிட்ட நடந்தத சொன்னாரு

அதுக்கு அந்த மீன் சொல்லுச்சு நீங்கதான மேகத்துக்கு மேல வீடு வேணும்னு கேட்டீங்க அதான் வீடு பறந்து போயி மேகத்துக்கு மேல போய்டுச்சுன்னு சொல்லுச்சு அந்த தங்க மீன்

இத கேட்ட மீனவருக்கு ரொம்ப வருத்தமா போச்சு ,அப்பத்தான் அவரு கேட்டாரு எனக்கு பேராசை இல்லாத மனைவி வேணும்னு



இப்பதான் உங்களுக்கு வேணும்ங்கிறத கேக்குறீங்க-ன்னு சொல்லி ஒரு மந்திரத்தை சொல்லுச்சு அந்த மீன்

வீட்டுக்கு வந்த மீனவருக்கு ஒரே ஆச்சர்யமா போச்சு ,அவரோட பழைய வீடு அங்க இருந்துச்சு ,ஆனா எப்பவும் சிடு சிடுன்னு இருக்குற அவரோட மனைவி



சிரிச்சிகிட்டே அவர வரவேத்தாங்க, தன்னோட மனைவி நல்ல படியா திரும்பி வந்ததோட ,நல்ல பெண்ணா மாறி வந்தத பார்த்த அந்த மீனவருக்கு ரொம்ப சந்தோசம்

அதுக்கு அப்பறமா அந்த தங்க மீன் கிட்ட எந்த உதவியும் கேட்க்காம நல்ல நண்பனா இருந்தாரு அந்த மீனவர்

# சூரியனை நோக்கி ஆதித்யா எல்-1 விண்கலம்: பி.எஸ்.எல்.வி. சி-57 ராக்கெட் விண்ணில் பாய்ந்தது...



சூரியனில் உள்ள காந்தப்புயலை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்-1 என்ற புதிய விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இந்தியா சார்பில் முதன்முதலில் சூரியனைக் கண்காணித்து ஆய்வுசெய்ய அனுப்பப்படும் முதல் விண்கலம் என்ற பெருமையையும் ஆதித்யா எல்-1 விண்கலம் பெறுகிறது. இதில் பெங்களவில் உள்ள ஐ.ஐ.எம். கல்வி நிறுவனம் வடிவமைத்த 7 ஆய்வுக்கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன. பூமியில் சுமார் 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் "லெக்ராஞ்சியன் பாயிண்ட் ஒன்" என்னும் இடத்தில் இந்த விண்கலம் நிலை நிறுத்தப்பட்டு குறிப்பாக, சூரியனை நோக்கிய கோணத்தில் நிறுத்தப்படுகிறது. இந்தக் கருவிகள் சூரியனின் வெப்பம், காந்த துகள்கள் வெளியேற்றம், விண்வெளியின் காலநிலை, விண்வெளியில் உள்ள துகள்கள் ஆகியவை குறித்து ஆய்வுசெய்ய இருக்கிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வுமையத்தில் பி.எஸ்.எல்.வி. சி-57 ராக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்தது. இஜதயடுத்து, ராக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணியான 24 மணி நேர கவுண்ட்டவுன் 01.09.2023 அன்று முற்பகல் 11.50 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள்களின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்தனர். இந்நிலையில், பி.எஸ்.எல்.வி. சி-57 ராக்கெட் திட்டமிட்டப்படி 02.09.2023 பகல் 11.50 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்

## பழமொழி

***பழமொழி***

சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத் திருவெண்பாவைக் கற்றுக்கொடுக்க வேண்டுமா?

***பொருள்***

மாணிக்கவாசகர் இயற்றிய திருவெண்பா சிதம்பரம் சிவன் கோவில் அம்பலத்திலும் ஊரிலும் எப்போதும் ஒலித்துக்கொண்டு இருக்கும்போது, "கற்றலிற் கேட்டலே நன்று" என்பதற்கேற்ப அந்த ஊரில் பிறந்த குழந்தைகூட எளிதில் திருவெண்பாவை எளிதில் கற்றுக்கொள்ளும் என்பது செய்தி.

***தமிழ் விளக்கம்***

இன்றைய சிதம்பரத்தில் வெண்பாடுவதை விட வன்பாடுவதே அதிகம் என்பதால், இன்று அங்குப் பிறக்கும் குழந்தைகள் கேள்விஞானத்தில் திருவெண்பா கற்றுக்கொள்வது எங்கே?.

## திருக்குறள்

[ 383 ]




தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.

Alertness, learning bravery
Are adjuncts three of monarchy.







# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்களிடமிருந்து அதிக கோரிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் வைத்திருப்பதை உணருவீர்கள்.



**ரிஷபம்**

இந்த வாரம் சில முக்கியமான குடும்ப வேலைகளை நீங்கள் இழக்க நேரிடலாம். இதனால் வீட்டில் உள்ளவர்களிடம் திட்டும் பேச்சை கேட்க வேண்டி வரும்.



**மிதுனம்**

இந்த வாரம், உங்கள் குடும்பத்தின் மீதான உங்கள் பொறுப்புகளை உணர்ந்து, குடும்ப உறுப்பினர்களின் தேவைகளுக்குத் தேவையான முன்னுரிமை அளிப்பீர்கள்.



**கடகம்**

இந்த வாரம் உங்கள் பணத்தைச் சேமிக்கும் எண்ணத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், இந்த வாரத்தில் இருந்தே அதை நோக்கித் தொடங்க வேண்டும்.



**சிம்மம்**

இந்த வாரம் சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இல்லை என்றால், அவற்றை மோசமாக்குவதற்கு பதிலாக, பொறுமையாக இருந்து நல்ல நேரத்திற்காக காத்திருக்க வேண்டும்.



**கன்னி**

இந்த வாரம், நீங்கள் உங்கள் பணியிடத்திலிருந்து சீக்கிரம் வீட்டிற்கு வர முயற்சிப்பீர்கள், அதில் நீங்கள் வெற்றியையும் பெறுவீர்கள்.



**துலாம்**

இந்த வாரம் உங்களின் தொழிலில் வளர்ச்சி ஏற்படும், எந்த வேலை செய்தாலும் அதை நன்றாகப் பார்த்து புரிந்து கொள்ள சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.



**விருச்சிகம்**

இந்த வாரம் உழைத்துக் கொண்டிருந்த திட்டத்தின் வெற்றியைப் பற்றி மற்றவர்களிடமிருந்து வெளிப்படையான பாராட்டுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.



**தனுசு**

இந்த வாரம் மன அழுத்தத்திலிருந்து விடுபட விரும்பினால், உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் சிறிது நேரம் செலவிட வேண்டும்.



**மகரம்**

இந்த வாரம் உங்கள் வெற்றியைப் பார்த்து பொறாமைப் படுவார்கள். வகுப்பில் உள்ள பிற மாணவர்கள் சென்று உங்களுக்கு எதி-ராக ஆசிரியர்களைத் தூண்டிவிடலாம்.



**கும்பம்**

இந்த வாரம் குடும்ப வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருப்பதால், உங்கள் வீட்டின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வாகனம் வாங்குவீர்கள்.



**மீனம்**


இந்த வாரம் அனைத்து மாணவர்களும் திட்டமிட்ட முறையில் முன்னேறி, தங்கள் இலக்குகளை அடைய தேவையான அனைத்தையும் பட்டியலிடுங்கள்.

# YOGASANAM

## சதுஷ் பாதாசனம்

**பலன்கள்:-**

முதுகுத்தண்டை நீட்சியடையச் செய்கிறது
முதுகுத் தசைகளைப் பலப்படுத்துகிறது
கழுத்து, மார்பு பகுதிகளை விரிக்கிறது
கைகளை நீட்சியடையச் செய்வதுடன் வலுப்படுத்தவும் செய்கிறது
தோள்களை நீட்சியடையச் செய்கிறது, அவற்றின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
தைராய்டு சுரப்பியின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
நுரையீரலைப் பலப்படுத்துகிறது
இருதய இயக்கத்தைச் சீராக வைக்க உதவுகிறது
அதிக இரத்த அழுத்தத்தைச் சரி செய்ய உதவுகிறது
இடுப்பின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
வயிற்று உள்ளுறுப்புகளின் நலனைப் பாதுகாக்கிறது
சீரண இயக்கத்தை மேம்படுத்துகிறது
தலைவலியைப் போக்க உதவுகிறது
மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் உபாதைகளைப் போக்க உதவுகிறது
கால் வலியைப் போக்குகிறதுளூ கால்களைப் பலப்படுத்துகிறது
உடல் அசதியைப் போக்குகிறது
தூக்கமின்மையை சரி செய்கிறது
மன அழுத்தத்தைப் போக்குகிறது
மனதை அமைதிப்படுத்துகிறது



**செய்முறை:-**

விரிப்பில் படுக்கவும். கால்களை மடக்கி இரண்டு பாதங்களையும் தரையில் வைக்கவும். கணுக்கால், முட்டிக்கு நேர் கீழே இருக்க வேண்டும். கைகள் நீட்டியிருக்க வேண்டும்.

கைகளால் கணுக்கால்களைப் பற்றிக் கொள்ளவும்.

மூச்சை உள்ளிழுத்தவாறு பாதங்களையும் கைகளையும் தரையோடு அழுத்தி இடுப்பை மேல் நோக்கி உயர்த்தவும்.

தோள்களை விரிக்கவும்.

ஒரு நிமிடம் இந்நிலையில் இருக்கவும். ஆசன நிலையிலிருந்து வெளியேற, இடுப்பைத் தரையில் வைத்து, கணுக்கால்களை விடுவித்து கால்களை நீட்டவும்.

# பொது அறிவு

1.மெதுவாக நகரும் நில விலங்கு எது?

2.தண்ணீருக்கு அடியில் மெதுவாக வாழும் விலங்கு எது?

3.விண்வெளிக்குச் சென்ற முதல் விலங்கு?

4.இரானி கோப்பை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

5.ஒலிம்பிக் போட்டிகளில் ஹாக்கி எந்த ஆண்டு சேர்க்கப்பட்டது?

6."கிரவுண்ட் ஸ்ட்ரோக்" எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

7.2022 FIFA உலகக் கோப்பையை வென்ற நாடு எது?

8.இரட்சணிய யாத்திரிகம் எத்தனை பருவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது?

9.எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளையின் இயற்பெயர்? கம்பரை ஆதரித்த வள்ளல்?

10.கம்பரை ஆதரித்த வள்ளல்?

11.கம்பர் இயற்றிய மற்றொரு நூல்?

12.வள்ளத் தோளின் பாடல்களை மொழி பெயர்த்திருக்கும் கவிஞர்?

13.ஆதார் அட்டையை முதலில் பெற்றவர் யார்?

14.இந்தியாவின் முதல் பெண் ஐஏஎஸ் அதிகாரி யார்?

15.இந்தியாவின் பறக்கும் சீக்கியர் என்று அழைக்கப்படுபவர் யார்?

16.உலகிலேயே நஞ்சுமிக்க மிக நீளமான பாம்பு எது ?

17.கோவலன் கொலைக்களப் பட்ட இடம் ?

18.மதங்க சூளாமணி எனும் நூலின் ஆசிரியர் ?

19.நல்லபாம்பின் நச்சிலிருந்து எடுக்கப்படும் கோப்ராக்சின் எனும் மருந்து எதற்கு பயன்படுகிறது?

20.பொருட்பெயர், எத்தனை வகைப்படும்?

21.மல்லிகை சூடினாள் - ஆகுபெயர் கூறுக?

22.சந்திரனுக்கு இந்தியாவின் முதல் பயணம் எது?

23.இந்திய ராணுவத்தின் மிக உயர்ந்த பதவி எது?

24.ஆஸ்கார் விருதை வென்ற முதல் இந்தியர் யார்?

25.இந்தியாவிலிருந்து முதல் பிரபஞ்ச அழகி யார்?

26.இந்தியாவில் இருந்து முதல் உலக அழகி யார்?

27.கிவி பறவை எந்த நாட்டில் காணப்படுகிறது?

# *Entertainment Corner*

## ARUSUVAI SAMAYAL

## DAL BUKHARA

### *INGREDIENTS*

**Main Ingredients**

1 cup Urad Dal
2 tablespoon oil
1 teaspoon cumin seeds
2 sticks cinnamon
2 medium onions, chopped
1 pod garlic and 2 inch piece ginger, pureed to a paste with 1/4 cup water
8 Tomatoes
2 teaspoon chilli powder
1 teaspoon turmeric powder
2 teaspoon cumin powder
1.5 teaspoon salt
1/2 cup cream
3 tablespoon unsalted butter

### *INSTRUCTIONS*

Heat the pan with a tablespoon of oil and add in the cumin seeds and the cinnamon.

Add in the onions and fry till soft. About 3 minutes on medium flame. Add in the ginger garlic paste and briefly fry for a minute.

Run the whole tomatoes in a blender and add it to the pan.

Immediately, add in the chilli powder, turmeric powder, cumin powder and the salt.

Add in the cooked dal. To the dal, add in 500 ml of water.

Now, reduce the flame to the lowest possible. Cover the pan with a lid and let it simmer for one hour. Keep stirring every 10 minutes to avoid the dal scorching at the bottom.

After one hour, the dal would have become creamy and thick.

Add in 1/2 a cup of cream and 3-4 tablespoon of butter. Now don’t skip this step. This is what makes this dish what it is. Simmer briefly for a minute and remove the pan from heat.

Serve hot with roti, chapati.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 6 | 8 | 7 | 1 | 4 | 5 | 3 |
| 7 | 4 | 5 | 3 | 9 | 2 | 6 | 8 | 1 |
| 8 | 3 | 1 | 4 | 5 | 6 | 7 | 9 | 2 |
| 3 | 7 | 9 | 2 | 1 | 8 | 5 | 4 | 6 |
| 1 | 8 | 2 | 6 | 4 | 5 | 9 | 3 | 7 |
| 5 | 6 | 4 | 7 | 3 | 9 | 1 | 2 | 8 |
| 6 | 5 | 3 | 1 | 8 | 4 | 2 | 7 | 9 |
| 9 | 2 | 7 | 5 | 6 | 3 | 8 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 9 | 2 | 7 | 3 | 6 | 5 |

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 7 | | | 5 |
| | 7 | | | 5 | | | 4 | 8 |
| | | 8 | 9 | | | | | 6 |
| | | 4 | 5 | | 6 | | | |
| | 6 | | | 8 | | | 7 | 2 |
| | | | | | 2 | | 9 | |
| 6 | | | | | 9 | 4 | | |
| 8 | | 9 | | 7 | | | | |
| 2 | | | 4 | | | | 5 | |

## சொல் விளையாட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி | ங் | க | ம் | பு | மே |
| ரி | டை | டெ | ல் | லி | க |
| ப் | ஆ | ல | ம | ர | ம் |
| பு | க் | ச | யி | தா | செ |
| ன | கி | ங | ல் | ம | ன் |
| ம | கா | த் | மா | ரை | னை |

கட்டத்தில் மறைந்து உள்ள வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## விடுகதை விளையாட்டு

1. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு -அது என்ன ?

2. உங்களுக்கு சொந்தமானத ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள் -அது என்ன ?

3. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். -அது என்ன?

4. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. -அது என்ன?

5. வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது -அது என்ன?

6. இலையுண்டு கிளையில்லை,பூ உண்டு மணமில்லை,காய் உண்டு விதையில்லை,பட்டை உண்டு கட்டை இல்லை,கன்று உண்டு பசு இல்லை -அது என்ன?

### சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1.பிரபஞ்சம்
2. நெல்லிக்காய்
3. வெண்டைக்காய்
4. இயந்திரம்
5. விருந்தினர்
6. பத்தொன்பது
7. புதக்கங்கள்
8. கட்டிடக்கலை
9.காந்தம்

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்


1.கடல் 2.நிழல்
3.சைக்கிள் 4.கண்
5.ஆமை 6.முட்டை


TNBIL04133 R.Dis.No.1845/2014



# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி



*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.


## HAND CRAFT



## MEHENDI



## படத்தில் உள்ள 10 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH